சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
சிவபெருமான் பட விளக்கம்

* While coloring make the children to chant the following chants:

1. சிவனின் நெற்றிக்கண் என்பது விழிப்புணர்வு. [ஓம் முக்கண்ணா போற்றி போற்றி!]

2. அவரது ஜடாமுடி மிக ஒழுங்காகக் கட்டப்பட்டு இருக்கிறது. [அலைபாயும் மனதை மிகவும் பக்குவமாக்கிக் கொள்வதே இதன் அடையாளம்] [ஓம் பணித்த சடையாய் போற்றி போற்றி!]

3. அவரது ஜடாமுடியில் கட்டப்பட்டுள்ள பிறைச்சந்திரன். [தேயும் வளரும் நிலா, மகிழ்ச்சியில் துள்ளும்-கவலையில் சோரும் மனதைக் குறிக்கிறது] அதை விழிப்புணர்வாகிய சிவனுடன் கட்டிப்போட்டு விடுகிறோம். [ஓம் மாசறு திங்கள் அணிவாய் போற்றி போற்றி!]

4. சதா அவர் தலையில் இருந்து வழியும் கங்கை ஆறு. [கங்கை ஆறு ஒரு போதும் வற்றவே வற்றாது. அதுபோல சதா நம் மனதில் சந்தோஷம் ஆறு போல ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் ஒரு ஆறு எப்படித் தான் ஓடும் பகுதியில் உள்ள அனைவருக்கும் அனைத்து உயிர்களுக்கும் பயன்தருமோ, அதைப்போல நாம் மிகவும் பயனுள்ள மனிதனாக வாழவேண்டும்] [ஓம் கங்கை சூடினாய் போற்றி போற்றி!]

5. ஜடாமுடியில் உள்ள பூ தாவரம் [கொன்றைமலர்], நிலா, கழுத்தில் உள்ள நாகம் [விலங்கு இனம்], கையில் உள்ள தீ, திரிசூலம் [இரும்பால் ஆனது] என அனைத்திலும் சிவன் நிறைகிறார்.

6. நாகம் - தியான சக்தி. [ஓம் நாகபூஷணா போற்றி போற்றி!]

7. கையில் உள்ள தீ - ப்ரபஞ்சத்தில் உள்ள ஒளி சக்தி. [ஓம் எரியனல் ஏந்துவாய் போற்றி போற்றி!]

8. மறுகையில் உள்ள - உடுக்கை - ப்ரபஞ்சத்தில் உள்ள ஒலி சக்தி. [ஓம் தமருகம் ஏந்துவாய் போற்றி போற்றி!]

9. திரிசூலம் - ஆணவத்தை நல்ல சக்தியாக மாற்றும் அறிவு. [ஓம் மூவிலைவேல் கொண்டாய் போற்றி போற்றி!]

10. அபயக்கரம் - மூலம் கிடைக்கும் சந்தோஷ வாழ்க்கை. [ஓம் அஞ்சேல் என்றோய் போற்றி போற்றி!]

11. அவர் இடையில் உள்ள ஆடைகள் - நான்கு திசைகள். [ஓம் திக்கெல்லாம் ஆனாய் போற்றி போற்றி!]